IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS
SC.NO.167/2021

Deposition of Witness for P.W.10

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.சக்கரவர்த்தி |
| FATHER NAME | - | திரு.சின்னராஜ் |
| VILLAGE | - | தீர்த்தம் கிராமம்,மேலரசம்பட்டு |
| TALUK | - | அணைக்கட்டு |
| OCCUPATION | - | விவசாயம் |
| AGE | - | 67 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.08.2025.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை –</u>

நான் அணைக்கட்டு, மேலரசம்பட்டு தாலுக்கா, தீர்த்தம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தீர்த்தம் கிராமத்தில் தர்மகர்த்தாவாக இருக்கிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு வேப்பம்குப்பம் போலீஸ் நிலையத்திற்கு நான் சென்ற போது கையெழுத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க போட்டுக் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.4. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.5. கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து செய்து கொடுத்தேன் போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை—

27.04.2021 ல் போலீசார் ஈஸ்வரன் கொலை செய்யப்பட்ட இடத்தில் என் முன்னிலையிலும் காந்தி முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் வரைந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் மரக்கட்டையை எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பார்க்கவில்லை. போலீசார் எங்கள் முன்னிலையில் மரக்கட்டையை கைப்பற்றினார்கள் என்றும், கைப்பற்றுதல் மகசர் , பார்வை மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரிகளிடம் அனுகூலம் பெற்றுக் கொண்டு எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை— எதிரிகள் தரப்பில் இல்லை

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 13.08.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

13.8.25

**Additional District Judge(FTC)**
**Vellore.**